<u>தொழிலாளர் நீதிமன்றம். காஞ்சிபுரம்</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **ID.No.** | **:** | **2/2024** | சாட்சியம் | **:** | **MW1** |
| **Name** | **:** | திரு.திருவேங்கடம் | | | |
| **Date** | **:** | **13.02.2026** | | | |
| **Time** | **:** | **12.29 p.m to 1.01 p.m** | | | |

<u>நி.த.சா.**1.**திரு.திருவேங்கடம் என்பவர் இன்று ஆஜர் செய்யப்பட்டு சத்திய பிரமாணம்செய்விக்கப்பட்டார். குறுக்கு விசாரணை</u>

நான் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் 2008 ஆம் ஆண்டு வேலைக்கு சேர்ந்தேன். நான் சீனியர் எக்ஸிக்யூட்டிவ் ஆவேன். வழக்கு சம்பந்தப்பட்ட அனைத்து விவரங்களும் நேரடியாக தெரியும். எங்கள் நிறுவனத்தில் திலீப் என்பவர் HR சீனியர் மேனேஜராக இருக்கிறார் என்றால் ஆமாம். மனுதாரர் ஏப்ரல் 2022-ல் எங்கள் நிறுவனத்தில் வேலைக்கு சேர்ந்தார். எங்கள் நிறுவனத்தில் வேலைக்கு சேர்வதற்கு முன்னர் அவர் ACL என்ற நிறுவனத்தில் வேலை செய்தார் என்றால் அவ்வாறு சொன்னார். மனுதாரருக்கு பணி நியமன கடிதம் கொடுக்கப்பட்டது. நி.சா.ஆ.**5** மூன்னிலைக்கு மனுதாரரின் தகுதிக்காண் பருவம் ஜனவரி-2023 இல் முடிவடைந்தது அதன் அடிப்படையில் அவர் நிரந்தர தொழிலாளியாக தான்

கருதப்பட வேண்டும் என்றால் ஆமாம். மனுதாரர் எங்கள் நிறுவனத்தில் டெய்லராக இருந்தார். மனுதாரர் தொழிலாளர் துணை ஆணையர் முன்பு ஒரு மனு தாக்கல் செய்த விவரம் தெரியுமா என்றால் மனு தாக்கல் செய்த விவரம் தெரியும். தொ.சா.ஆ.5 நிர்வாகம் கொடுத்த பதில் என்றால் ஆமாம். அந்த ஆவணத்தில் 16.02.2023-ல் அன்று ACL-லிடம் இருந்து கடிதம் கிடைக்கப்பெற்றதாக தெரிவிக்கப்பட்டுள்ளது என்றால் ஆமாம். மனுதாரரின் வேலை தன்மை திருப்திகரமாக இல்லை என சாட்சியத்தில் சொல்லப்பட்டுள்ளது என்றால் ஆமாம். மனுதாரர் தைத்துக் கொடுத்து அனைத்தும் உபயோகமில்லாமல் ஆகிவிட்டது என சொல்லி இருக்கிறோம் என்றால் ஆமாம். அது சம்பந்தமாக மனுதாரருக்கு எச்சரிக்கை கடிதமோ காரணம் கேட்கும் அறிவிப்போ கொடுக்கப்பட்டதா என்றார் இல்லை. மனுதாரரால் வீணாக்கப்பட்டதாக சொல்லும் துணி அப்படியே வைக்கப்பட்டுள்ளதா என்றால் இல்லை. அவ்வாறு வீணாக்கப்பட்டதாக சொல்லப்படும் துணிகளை மீண்டும் தைத்து சரியாக்கி கொள்ளலாம் என்றால் ஆமாம். எங்கள நிறுவனத்தில் தோராயமாக 1200 பேர் வேலை பார்க்கிறார்கள். அதில் சுமார் 800 பெண்கள் இருப்பார்கள். எங்கள் நிறுவனத்தில் பணி நிரந்தரம் செய்யப்படும் பட்சத்தில் நிரந்தரம் செய்யப்பட்டதாக தெரிவித்து ஆணை எதுவும் வழங்கப்படுமா என்றால் இல்லை பணி நிரந்தரம் செய்யப்பட்டதாக கருதப்படும் (Deemed).

05.01.2023 அன்று மனுதாரர் கொடுத்த புகாரின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்பட்டதா என்றால் அவர் சொன்னது போன்று எந்த சம்பவமும் நடைபெறவில்லை. மனுதாரருக்கு கணவர் இல்லை என்றால் ஞாபகம் இல்லை. மனுதாரர் ஒரு விதவை என்றாலும் கண்ணன், வெங்கடேசன் ஆகியோர் அவரை விதவை என திட்டினார்கள் என்று தெரிவித்து என்னிடம் ஒரு புகார் கொடுத்து இருந்தார் என்றாலும் அதனை மறைப்பதற்காக ஞாபகம் இல்லை என சொல்கிறேன் என்றால் சரியல்ல. அது சம்பந்தமாக அவர் ஒரு புகார் கொடுத்திருந்தார் என்றாலும் இல்லை. எங்கள் நிறுவனத்தில் சிசிடிவி உள்ளது சம்பவ சமயத்தில் இருந்ததா என தெரியவில்லை. மனுதாரர் என்ன படித்துள்ளார் என இப்போது ஞாபகம் இல்லை. பொதுவாக காவல் நிலையத்தில் ஒரு புகார் கொடுக்கப்படும் பொழுது அதனை பெற்றுக் கொண்டு காவல் நிலையத்தில் ஒப்புகை செய்து முத்திரை வைக்கப்படும் என்பது பற்றி தெரியுமா என்றால் தெரியாது. 05.01.2023 அன்று கண்ணன், வெங்கடேசன் ஆகியோர் மனுதாரரின் கையை இறுக்கிப்பிடித்ததாக சொல்லி உள்ளதற்கு ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டுள்ளதா என்றால் அதுபோன்று சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என சொல்லப்பட்டுள்ளது. நி.சா.ஆ.4 ஆவணத்தில் உள்ள சங்கதிகள் மனுதாரரால் எழுதப்படவில்லை என்றால்

ஆமாம். அவருக்கு எழுத தெரியாத காரணத்தினால் அவர் சொல்ல சொல்ல வேறு ஒரு நபர் எழுதி கொடுத்தார். யார் அது போன்று எழுதிக் கொடுத்தார் என தெரியுமா என்றால் நான் பார்க்கவில்லை. எங்களுடைய பதில் உரையிலோ, சாட்சியத்திலோ மனுதாரர் சொன்னதன் பேரில் வேறொரு நபர் எழுதிக் கொடுத்தார் என்ற விவரத்தை சொல்லி இருக்கிறோமா என்றால் இல்லை. மனுதாரரிடம் பூர்த்தி செய்யப்படாத தாளில் நாங்கள் கையெழுத்து பெற்றுக் கொண்டு சங்கதிகளை நாங்களே எழுதிக் கொண்டு விட்டோம் என்றால் இல்லை. மனுதாரரின் ராஜினாமா கடிதம் ஏற்றுக்கொள்ளப்பட்டதாக எழுத்து மூலமாக தெரிவிக்கப்பட்டதா என்றால் இல்லை. மாத சம்பளம் வங்கி கணக்கில் வரவு வைக்கப்படும். மாதாமாதம் சம்பளம் ரசீது கொடுக்கப்படும். சம்பள ரசீது கொடுத்ததற்கு தொழிலாளியிடம் ஒப்புகை கையெழுத்து பெற்றுக் கொள்வோம். நி.சா.ஆ.**5** சம்பள ரசீதுகளில் மனுதாரரின் கையெழுத்து இல்லை என்றால் ஆமாம். ஆனால் பதிவேடுகளில் பெற்றுக் கொள்வோம். சம்பள பதிவேடு தாக்கல் செய்ய இயலும். 19.04.2023ல் செட்டில்மெண்ட் தொகை அனுப்பப்படும் என கடிதம் அனுப்பப்பட்டது என்றால் ஆமாம். நிர்வாகம் சார்பாக தொழிலாளர் துணை ஆணையர் முன்பு பதில் தாக்கல் செய்த பிறகு தான் மேற்படி கடிதம் அனுப்பப்பட்டது என்றால் ஆமாம். மனுதாரர் ராஜினாமா கடிதம் எதுவும் கொடுக்கவில்லை என்றாலும் நிர்வாகம் தான்

அவரை பணியில் இருந்து நீக்கியது என்றாலும் இல்லை. மனுதாரர் ராஜினாமா கடிதம் கொடுத்ததன் பெயரில் அவருக்கு செலுத்த வேண்டிய செட்டில்மெண்ட் தொகையை அவர் பெற்றுக் கொள்ள வரவில்லை என சொல்லும் போது அவரின் வங்கி கணக்கில் அந்த தொகை செலுத்தப்பட்டதா என்றால் இல்லை. எங்கள் நிறுவனம் தொழிற்சாலை சட்டத்தின்படி செயல்படுகிறது என்றால் ஆமாம். மனுதாரர் நிரந்தர தொழிலாளி என்றாலும் அவருக்கு கொடுக்க வேண்டிய பண பயன்கள் எதையும் கொடுக்காமல் நாங்கள் பணியில் இருந்து நீக்கி விட்டோம் என்றால் தவறு. மனுதாரர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு அடிப்படையில் எந்த வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை விசாரணை மேற்கொள்ளப்படவில்லை என்றால் ஆமாம். ஆனால் அவருக்கு வாய்ப்பு கொடுக்கப்பட்டது. எழுத்து மூலமாக வாய்ப்பு கொடுக்கப்படவில்லை. எந்த குற்றமும் செய்யாத மனுதாரரை பணியில் இருந்து நீக்கியது தவறு என்றாலும் மனு படி உத்தரவாக வேண்டும் என்றாலும் சரியல்ல. நாங்கள் மனுதாரரை பணியில் இருந்து நீக்கவில்லை அவர்தான் ராஜினாமா செய்தார். இப்போது வேலைக்கு வந்தால் ஏற்றுக்கொள்வோமா என்றால் இல்லை. நிர்வாக அதிகாரிகள் செய்த தவறு மீது மனுதாரர் குற்றம் சுமத்திய காரணத்தினால் தான் அவரை பணியில் இருந்து நீக்கினோம் என்றால் இல்லை.

மறு விசாரணை இல்லை.

Typed to my dictation, read over to interpreted to the witness and acknowledged by him to be correct.
Sd/-S.Sujatha,
Presiding Officer,
Labour Court, Kancheepuram.
Dated:13.02.2026